| Page No.5 | |
|---|---|
| **<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>** | |
| நாள் | 20.01.2025 |
| O.S. No. | 22/2022 |
| வா.சா.1 | பாலாஜி |

2025ம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் நாள் பாலாஜி என்பவரின் சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1969ம் ஆண்டின் 54வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின்படி திரு.எஸ்.ஜீவாபாண்டியன்,M.Com.,M.Phil.,M.L., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலாஜி | சமயம் | : |
| தந்தை பெயர் | ; | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |
| தாலுக்கா | : | | |

<u>முதல் விசாரணை –</u>

(சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது)

நான் இவ்வழக்கில் வாதியான வங்கியில் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். எனது முதல் விசாரணைக்கான சத்திய பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். எனது தரப்பில் கீழ் கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகின்றன. 1) 04.09.2017ஆம் தேதியிட்ட கடன் விண்ணப்பத்தின் அசல் வா.சா.ஆ.1, 2) 07.09.2017ஆம் தேதியிட்ட கடன் அனுமதி கடிதத்தின் அசல் வா.சா.ஆ.2, 3) 07.09.2017ஆம் தேதியிட்ட கல்விக்கடன் ஒப்பந்தத்தின் அசல் வா.சா.ஆ.3, 4) 23.07.2021ஆம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.4, 5) 27.02.2021ஆம் தேதியிட்ட வங்கிக்கணக்கு நகல் வா.சா.ஆ.5, 6) 20.10.2020ஆம் தேதியிட்ட கணக்கு பட்டியலின் பதிவிறக்க நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுவில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.